1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அதுதான் எனக்கும் தெரியவில்லை. 30-32 ஆண்டு காலமாக இதைப்பற்றி யாருமே சிந்திக்காமல் ஏன் விட்டு விட்டார்கள் என்று தெரியவில்லை. இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான் இதற்குச் சட்டத்திலே ப்ரொவிஷன் செய்யலாம் என்று உத்தேசித்துக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. சட்டநாத கரையாளர்: அவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் பட்ஜெட் கூட்டத் தொடரில் வருமா? அந்தச் சட்டத்திலே நஷ்டஈடு கொடுப்பதற்கு இன்ஷூரன்ஸ் மூலமோ அல்லது அரசு நேரடியாகக் கொடுப்பதன் மூலமோ அல்லது முதலாளிகளிடமிருந்து வரைபடம் தாக்கல் செய்கிற போது ஒரு தொகையை வசூலிப்பதன் மூலமோ-அல்லது தொழிலாளர்களிடமிருந்து பங்குத் தொகை வசூலிப்பதன் மூலமோ என்று எந்த அடிப்படையில் அந்த நஷ்டஈடு கொடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டத்தைப் பற்றியே விரிவான விளக்கம் கேட்டு இருக்கிறார். எல்லா விவரங்களையும் சொல்வதற்கு ஆரம்பித்தால் நேரம் போதாது. ஆகவே, சட்டத்தைப்பற்றி விரிவாகப் பின்னர் பேசலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் வருமா என்று கேட்டார்கள். இப்போதே உடனடியாகக் கொண்டு வந்து விட முடியாது. மத்திய அரசு கொண்டு வரவில்லையென்றால், மத்திய அரசு அந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதைத் தாமதப்படுத்தினால், மாநில அரசு கொண்டு வரும். இதுதான் இன்றுள்ள நிலைமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) 'பால்கமிஷன்' அறிக்கைமீது நடைபெற்ற விவாதம்-தொடர்பாக.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் சற்றேறக்குறைய 3 தினங்களுக்கு பால் கமிஷன் அறிக்கைமீது விவாதம் நடைபெற்று அதிலே நாங்கள் எல்லாம் பங்கெடுத்துக் கொண்டோம். அதில்

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1982 பிப்ரவரி 17

பங்கேற்ற அத்தனை உறுப்பினர்களும் அந்தக் கோவிலில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தங்கள் மூலமாக அரசுக்கு விண்ணப் பித்துக்கொண்டோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கேயுள்ள அறங்காவலர் குழு ராசினாமா செய்து விட்டார்கள் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் குற்ற வாளிகளைக் கண்டுபிடிக்க உதவ வேண்டும் என்றும் சொன்னார்கள், குற்றவாளிகளைக் கண்டுபிடித்தார்களா என்கிற விவரம் இப்போது தெரிவிக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பாராளுமன்றத்திலும் சட்டமன்றத் திலும் தொடர்ந்து பணியாற்றியவர். இப்படி திடீரென்று எழுந்து பொத்தாம் பொதுவில் ஒரு "இம்பர்மேஷன்" கேட்பது முறையல்ல. முறைப்படி அதைக் கேட்டால், அரசாங்கத்திட மிருந்து பதில் பெற்றுத்தர முடியும். இந்த முறையை நான் அனுமதிக்கவில்லை.

திரு. வி கிருஷ்ணமூர்த்தி: சார், இன்பர்மேஷன் இருந் தால் சொல்லச் சொல்லுங்கள், அவர்கள் சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீரென்று எழுந்து இப்படிக் கேட்பது எல்லாம் முறை அல்ல.

(முற்பகல் 10-30)

(ஆ.) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நேற்றையதினம் தர்மபுரி மாவட்டத்தில் நடைபெற்ற அடக்குமுறை பற்றி கேட்டேன். இன்றைக்கு அந்தப் பிரச்னையை எடுத்துக் கொள் வதாகச் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு அதை எடுத்துக் கொள்வதாக நான் சொல்லவில்லை. இன்றைக்கும் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் வருகிறது. கே. வி. குப்பத்தைப்பற்றியது; போலீஸ் அடக்குமுறை பற்றித்தான் வருகிறது. 20 பேர்கள் அதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

* * *

நீங்கள் இப்படிக் கோஷம் போடுவது முறையே அல்ல. அவை எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது.

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்சனைப்பற்றிக் கேட்கிறார்கள்.....

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.